
பக்கங்கள் 14+5

மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

# ஓட்டோ விபத்தில் இளைஞன் சாவு!

**மூவர் வைத்தியசாலையில்**



(பொகவந்தலாவ நிருபர் சதீஸ்)

நோர்வூட் பொலிஸ் பிரிவுக் குட்பட்ட புளியாவத்தை – சாஞ்சி மலை பிரதான வீதியில் 02▶

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 பங்குனி 04 ஞாயிற்றுக்கிழமை 17.03.2024 அதிர்வு 230



# கேள்விகளைக் கண்டு எவரும் பதற்றமடையத் தேவையில்லை

## இந்திய வீடமைப்புத் திட்டத்தில் வெளிப்படைத்தன்மை இருக்க வேண்டும் என்று மனோ கணேசன் வலியுறுத்து

இந்திய வீடமைப்புத் திட்டத்தில் வெளிப் படைத்தன்மை இருக்க வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு என்று தமிழ் முற்போக்குக் கூட்டணி யின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரி வித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில், “ஒரு வீடு, ரூபா இருபத்து எட்டு இலட்சம் என்ற மதிப்பீட்டுடன், 1,300 வீடுகளைக் கட்டும் நான் காம் கட்ட பெருந்தோட்ட மக்களுக்கான இந்திய வீடமைப்பு வேலைத்திட்டப் பணிகள் தற்போது ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன. 04▶




# எல்லை தாண்டி வந்து மீன்பிடித்த இந்திய மீனவர்கள் 21 பேர் கைது!

(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன்)

எல்லை தாண்டி வந்து இலங்கைக் கடற்பரப்பினுள் மீன்பிடி நடவடிக்கை களில் ஈடுபட்ட இராமேஸ்வரம் பகுதி யைச் சேர்ந்த 21 மீனவர்கள் 2 படகு களுடன் கைது செய்யப்பட்டனர்.

இன்று அதிகாலை நெடுந்தீவுக் கடற்பரப்பில் வைத்து இலங்கைக் கடற் படையினரால் இந்தக் கைது நடவ டிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் நீரியல்வளத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்படவுள்ளனர்.

நீரியல்வளத் திணைக்களத்தி னர் அவர்களுக்கு எதிராக ஊர் காவற்றுறை நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளனர் என்று தெரி விக்கப்படுகின்றது.



# வடக்குத் தமிழ்த் தலைவர்களுடன் ஏப்ரலில் பேச்சு நடத்தவுள்ளோம்

## அநுரகுமார திஸநாயக்க எம்.பி. தகவல்

வடக்கு தமிழ்த் தலைவர்களுடன் ஏப்ரலில் பேச்சு வார்த்தைகளை முன்னெடுக்கவுள்ளேன். எமது ஆட்சியில் முற்போக்கு தமிழ் பிரதிநிதிகள் பங்கேற்பார்கள். மொழி உரிமை, நில உரிமை, கலாசார உரிமை உள்ளிட்டவை உறுதிப்படுத்தப்படும்."

– இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் தலைவரும், கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸநாயக்க தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தியின் கிளிநொச்சி மாவட்ட மாநாடு நேற்று கூட்டுறவுசங்க மண்டபத்தில் நடைபெற்றபோது உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கிளிநொச்சியில் உள்ளவர்கள் தமிழ் மக்களாக முகங்கொடுக்கும் பிரச்சினைகளும், பொதுமக்களாக முகங்கொடுக்கும் பிரச்சினைகளும் உங்களின் முன்னால் உள்ளன.

இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட வேண்டும். அவற்றிலிருந்து வெளியே வரவேண்டும். இந்தப் பிரச்சினைகள் இயற்கை அனர்த்தங்களால் ஏற்பட்டவை அல்ல. நாட்டின் அரசியல் கலாசாரம் மற்றும் நிருவாகத்தினால் ஏற்படுத்தப்பட்ட பிரச்சினைகளாகவே உள்ளன.

ஆகவே, தமிழ் மக்களாக நீங்களும், பொதுமக்களாக அனைவரும் முகங்கொடுத்துள்ள பிரச்சினைகளிலிருந்து மீள்வதற்கு அரசியல் ரீதியான தீர்மானத்தினை எடுக்க வேண்டியுள்ளது.

கீழ்மட்ட மக்கள், துன்புறும் மக்கள், பொதுமக்கள் என்று அனைவரும், வடக்கு,கிழக்கு, தெற்கு என்ற பேதமின்றி புதிய அரசாங்கத்தினை நாம் உருவாக்க வேண்டும்.



இந்த ஆண்டு ஜனாதிபதி தேர்தல் நடைபெறவுள்ளது. கடந்த காலங்களில் ஜனாதிபதி தேர்தல்களின்போது வெவ்வேறு தீர்மானங்களை வட மாகாண தமிழ் மக்கள் எடுத்துள்ளார்கள்.

தேர்தலை புறக்கணித்துள்ளீர்கள், தமிழ் வேட்பாளருக்கு வாக்களித்துள்ளீர்கள், தமிழ் கட்சிகள் ஆதிரிக்கும் தென்னிலங்கை தேசிய கட்சிகளுக்கு ஆதரவளித்துள்ளீர்கள்.

அதுதுமட்டுமன்றி, வடக்கு மக்கள் ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் அதிகளவில் கவனம் செலுத்துவது கிடையாது. அது கொழும்புக்குத் தலைமையை தேடுகின்ற, சிங்களமக்களுக்கு தலைமை வழங்குகின்ற தேர்தல் என்ற நிலைப்பாட்டைத்தான் கொண்டிருக்கின்றீர்கள்.

எதிர்காலத்திலும் இந்த நிலைமையைத் தொடரமுடியாது. வடக்கும், கிழக்கும், தெற்கும் இணைந்து ஆட்சியை தீர்மானிக்கும் காலம் வந்துவிட்டது. அதற்காக நாம் அனைவரும் ஒன்றிணைவோம்.

வழக்கமாக சமஷ்டி தருகின்றோம் எமக்கு வாக்களியுங்கள், 13 பிளஸ் தருகின்றோம் எமக்கு வாக்களியுங்கள் என்று தான் கூறுவார்கள். நாங்கள் அவ்வாறு கூறப்போவதில்லை. ஏனென்றால் நாங்கள் உங்களுடன் கொடுக்கல் வாங்கல் செய்வதற்கு வரவில்லை. அரசியல் என்பது வியாபாரம் அல்ல.

நாம் உங்களுக்கு ஒரு உறுதி மொழியைத் தருகின்றோம். நாம் ஆட்சியைப் பொறுப்பை ஏற்றதும் அனைவருக்கும் மூன்று வேளை உணவை உறுதிப்படுத்துவோம். மொழி, நிலம், கலாசாரம் ஆகிய உரிமைகளை உறுதிப்படுத்துவோம்.

அரசியலமைப்பு மாற்றம் தேவைப் பட்டால், அதுபற்றி ஆராய்வோம். அரசியல் உரிமைகள் பற்றி பேச்சுக்களை நடத்துவோம்.

எதிர்வரும் ஏப்ரல் மாதத்தில் நாம் யாழ்ப்பாணத்துக்கு செல்லவுள்ளோம். அங்கு வடக்கின் தமிழ்த் தலைவர்களுடன் பேச்சுக்களை நடத்தவுள்ளோம். தற்போது எம்முடன் முற்போக்கான தமிழ் தலைவர்கள் உரையாடல்களைச் செய்துவருகின்றார்கள். எமது ஆட்சி அமைகின்றபோது அவ்விதமான முற்போக்கு பிரதிநிதிகள் பங்காளர்களாக இருப்பார்கள்.

நாங்கள் ஆட்சியைப் பெற்றுக் கொண்டு தேசிய ஒற்றுமை குறித்து பேசுவதற்கு முனையவில்லை. நாம் தேசிய ஒற்றுமையுடனான ஆட்சியை அமைப்பதையே நோக்காகக் கொண்டிருக்கின்றோம்.

சுதந்திரத்தின் பின்னரான ஏற்படுத்தப்பட்ட பிரிவினைகளை தொடர்ந்தும் பின்பற்றிக் கொண்டும், பரம்பரை பரம்பரையாக ஆட்சி அதிகாரத்தினை தக்கவைக்கும் கலாசாரத்தினையும் மாற்றுதற்கு தெற்கு மக்கள் தயாராகி விட்டார்கள். அவர்களுடன் நீங்களும் இணைந்துகொள்ளுங்கள். தமிழர்களின் பங்களிப்புடனான ஆட்சியையே நாம் எதிர்பார்க்கின்றோம்."– என்றார்.

# ஆட்பலத்துக்காக குப்பைகளை சேர்த்தால் கட்சியின் அழிவிற்கே அது வழிவகுக்கும்



## சரத் பொன்சேகா கூறுகிறார்

"நேர்மையான அரசியல்வாதிகள் கொள்கையொன்றின் அடிப்படையிலேயே செயற்படுவர். அதனை விடுத்து ஆள்பலத்தை அதிகரித்துக் கொள்வதற்காக குப்பைகளை கட்சிக்குள் இணைத்துக் கொண்டிருந்தால் அது தோல்விக்கான முதற்படியாகும்."

– இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

கண்டியில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டமொன்றின் போது ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஒவ்வொரு அரசியல்வாதிகளுக்கும் ஒரு தரப்பினருடன் இணைவதற்கும், இணைத்துக் கொள்வதற்கும் ஆசைகள் ஏற்படலாம். ஆனார் நேர்மையான அரசியல்வாதிகள் என்றால் கொள்கையொன்றுடன் செயற்பட வேண்டும்.

அவ்வாறன்றி ஆள் பலத்தைக் காண்பிப்பதற்காக குப்பைகளை கட்சிக்குள் இணைத்துக் கொண்டிருந்தால் அது தோல்விக்கான முதற்படியாகும்.

நாட்டில் தற்போதுள்ள நிலைமை தொடர்பில் மக்கள் அதிருப்தியிலும் கவலையிலும் உள்ளனர். எனவே மாற்றமொன்றையே அவர்கள் எதிர்பார்க்கின்றனர்.

அதேவேளை அடுத்து ஆட்சியை யாரிடம் ஒப்படைப்பது என்பது குறித்து தீர்மானிக்க முடியாத நிலைமையிலும் மக்கள் உள்ளனர். தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னரே மக்கள் எந்த தரப்பினை தெரிவு செய்வார்கள் என்பதை அறிய முடியும்.

சபாநாயகர் மஹிந்த யாபா அபேவர்தனவுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையின் மீதான வாக்கெடுப்பின் போது நான் ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பாக நின்று செயற்படுவேன். ஆட்சியை வழங்குவதற்கு மக்கள் தீர்மானிப்பார்களாயின் நான் அவர்களுக்காக முன்னிற்பதற்கு தயாராகவுள்ளேன்."– என்றார்.

# விஜித ஹேரத்துக்கு எதிராக சட்ட நடவடிக்கை; ரோஹித அபேகுணவர்தன எம்.பி. தெரிவிப்பு

"என்னை திருடன் என்று குறிப்பிட்டு போலியான குற்றச்சாட்டுக்களை முன்வைத்த நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத்துக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பேன். போலியான குற்றச்சாட்டுக்களினால் எனது அரசியல் பயணத்தை பலவீனப்படுத்த முடியாது."

– இவ்வாறு கோப் குழுவின் தலைவர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார்.

மக்கள் விடுதலை முன்னணியின் தலைமை காரியாலயத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துக் கொண்ட மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத்,

'ஊழல் மோசடிக்கு எதிராக செயற்படுவதாக அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்திடம் குறிப்பிடுகிறது. ஆனால் உண்மையில் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. ஊழல் மோசடிகளை வெளிக்கொண்டு வரும் கோப் குழுவின் தலைவர் பதவிக்கு திருடர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்' என்றார்.

நாடாளுமன்ற உறுப்பினர் விஜித



ஹேரத்தின் குற்றச்சாட்டை மேற்கோள்காட்டி கோப் குழுவின் தலைவர் ரோஹித அபேகுணவர்தன நேற்று கொழும்பில் ஊடக சந்திப்பை நடத்தி மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இதன் போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கோப் குழுவின் தலைவராக நான் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டேன். இந்த நியமனம் தொடர்பில் பல விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன.

மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் என்னை திருடன் என்று விமர்சித்துள்ளார். எதை திருடினேன், எங்கு திருடினேன் என்பதை அவர் ஆதாரத்துடன் நீதிமன்றத்தில் நிரூபிக்க வேண்டும். ஆகவே இவரது பொய்யான குற்றச்சாட்டுக்கு எதிராக அடுத்த வாரம் சட்ட நடவடிக்கை எடுப்பேன்.

தங்க சங்கிலி அறுப்பு விவகாரம் தொடர்பில் நாடாளுமன்றத்திலும் விசேட உரையாற்றியுள்ளேன். எந்த பொலிஸ் நிலையத்திலும் என்மீது முறைப்பாடுகள் ஏதும் இல்லை என்பதை உறுதியாக குறிப்பிட்டுக் கொள்கிறேன்.

போலியான குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதும், வெறுப்புக்களை தூண்டி விடுவதும் மக்கள் விடுதலை முன்னணியின் கட்சி கொள்கையாக காணப்படுகிறது. பொய்யான குற்றச்சாட்டுக்களினால் எனது அரசியல் பயணத்தை பலவீனப்படுத்த முடியாது. எமது கட்சியான ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் சின்னம் தாமரை. அந்த தாமரை சேற்றில் தான் மலர்கிறது என்பதை அனைவரும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்." – என்றார்.

# சுதந்திரக் கட்சியை விட்டுச் செல்லாமல் புதிய கூட்டணியில் அரசியல் தொடரும்

## தயாசிறி ஜயசேகர எம்.பி. தெரிவிப்பு

"எனது புதிய அரசியல் பயணத்தை மனித நேயக் கூட்டணியுடன் ஆரம்பிக்கவுள்ளேன். ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியிலிருந்து பலரும் இக்கூட்டணியில் இணையவுள்ளனர். அத்தோடு சு.க. தலைவர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் இக்கூட்டணியில் இணைந்து பயணிக்க அழைப்பு விடுக்கின்றோம்."

– இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

எவ்வாறிருப்பினும் தான் ஒரு போதும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியை விட்டுச் செல்லப் போவதில்லை என்றும் அவர் தெரிவித்தார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"அரசியலில் நாம் பல்வேறு சந்தர்ப்பங்களில் கூட்டணிகள் அமைக்கப்படும். குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் அந்த கூட்டணிகள் பிளவடையும். அந்த வகையில் புதியதொரு பயணமாகவே 'மனித நேயக் கூட்டணி' ஆரம்பிக்கப்பட்டுள்ளது. நாடு எதிர்கொண்டுள்ள இருண்ட, இக்கட்டான அரசியல் நிலைமைக்கு தீர்வு காணும் நோக்கிலேயே இக்கூட்டணி உதயமாகியுள்ளது.



மக்களுக்கு தற்போது புதிய கட்சி, புதிய தலைமைத்துவமே தேவைப்படுகிறது. புதிய தலைமைத்துவத்தின் மீது மக்கள் நம்பிக்கை கொண்டுள்ளதோடு, அவ்வாறு ஒருவர் வருவார் என்ற நம்பிக்கையும் அவர்களிடம் காணப்படுகிறது. ஆனால் எவ்வாறிருப்பினும் நான் நீல நிறத்தையோ, ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியையோ விட்டுச் செல்ல மாட்டேன்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியில் அங்கத்துவம் வகித்துக் கொண்டு, கூட்டணியொன்றை அமைப்பது எந்த வகையிலும் அந்த கட்சிக்கு பாதிப்பாக அமையாது. புதிய கூட்டணியை தோற்றுவிப்பதன் மூலம், நான் சு.க.வை விட்டுச் செல்கின்றேன் என்று அர்த்தமல்ல.

சு.க.வின் தற்போதைய பொதுச் செயலாளருக்கும் இந்த நிகழ்விற்கு அழைப்பு விடுத்திருக்கின்றேன். அதிலிருந்து பலர் எம்முடன் இணைவார்கள். சு.க. தலைவர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நீண்ட காலமாக கூட்டணியொன்றை அமைப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளார். அந்த வகையில் அவருக்கும் அழைப்பு விடுத்திருக்கின்றேன்.

இந்த கூட்டணியுடன் இணைந்து முன்னோக்கிச் செல்வோம் என்று அவருக்கும் அழைப்பு விடுக்கின்றேன். 18 சிறிய கட்சிகளும், முன்னாள் அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் உள்ளிட்ட பலரும் எம்முடன் இணையவுள்ளனர். அவர்கள் யார்? எமது கூட்டணி எவ்வாறு இருக்கும் என்பதை எதிர்வரும் புதன்கிழமை 2.30 மணிக்கு முழு நாடும் அறிந்து கொள்ளும்"– என்றார்.

# வட்டுக்கோட்டை இளைஞன் கொலை: மேலுமொரு சந்தேகநபர் சிக்கினார்!

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், வட்டுக்கோட்டையில் வாள்வெட்டில் இளைஞன் உயிரிழந்த சம்பவம் தொடர்பாக மேலுமொரு சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

சித்தங்கேணியைச் சேர்ந்த மேற்படி நபர் யாழ்ப்பாணம் பிராந்திய குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸாரால் கீரிமலைப் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபரிடம் இருந்து இரண்டு மோட்டார் சைக்கிள்களும் மீட்கப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக ஏற்கனவே கைது செய்யப்பட்டவர்கள் மல்லாகம் நீதவான் நீதிமன்றத்தின் உத்தரவுப்படி தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

தனது மனைவியுடன் காரைநகருக்கு மோட்டார் சைக்கிளில் சென்று விட்டு வீடு திரும்பியவர்களைப் பொன்னாலை பால பகுதியில் உள்ள கடற்படையின் முகாம் முன்பாக வைத்து வன்முறைக் கும்பல் கடத்திச் சென்றது.

கணவனை ஒரு வாகனத்திலும், மனைவியை ஒரு வாகனத்திலும் கடத்திய வன்முறைக் கும்பல், மனைவியைச் சித்தங்கேணி பகுதியில் இறக்கி விட்டுச் சென்றது. கணவனைக் கடத்திச் சென்றவர்கள் கணவனைக் கடுமையான சித்திரவதைக்கு உள்ளாக்கி படுகாயங்களுடன் வட்டுக்கோட்டை வைத்தியசாலை முன்பாக வீசிச் சென்றனர்.

படுகாயத்துடன் காணப்பட்ட அவரை வைத்தியசாலைப் பணியாளர்கள் மீட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்த்த நிலையில் உயிரிழந்தார்.

இதேவேளை, இளைஞன் கடத்தப்படும்போது கடற்படை முகாமில் இருந்த நான்கு கடற்படையினரிடம் பொலிஸார் வாக்குமூலங்களைப் பெற்றுள்ளனர் என்று பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### கேள்விகளைக் கண்டு...

இந்திய அரசின் நன்கொடை உதவியுடனான இந்தத் திட்டம் தொடர்பில் இந்திய அரசுக்கு நன்றி கூறி, வீடு கட்டும் பணிகளை நாம் வரவேற்கின்றோம். அதேவேளை, இந்தத் திட்ட நடைமுறையில் முழுமையான வெளிப்படைத் தன்மை இருக்க வேண்டும் என்பதே தமிழ் முற்போக்குக் கூட்டணியின் நிலைப்பாடாகும்.

பெருந்தோட்டங்களில் இந்திய உதவியுடனான தனி வீடுகள் கட்டும் திட்டத்தை, 2015- 2019 ஆண்டுகால நல்லாட்சியின் பங்காளிகளாக இருந்தபோது நாம் ஆரம்பித்து வைத்தோம். எமது காலப் பகுதியில் நடைபெற்ற இந்த வீடு கட்டும் பணிகளில், யூ.என். - ஹெபிடாட் என்ற ஐக்கிய நாடுகள் சபையின் மனித வாழ்விடத் திட்டம், இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், சர்வதேச செஞ்சிலுவை மற்றும் செம்பிறைச் சங்கங்களின் சம்மேளனம் ஆகிய நம்பகத்தன்மை கொண்ட அரசசார்பற்ற நிறுவனங்கள் கட்டுமானப் பணிகளை நடைமுறைபடுத்தல், கண்காணிப்பு ஆகிய பொறுப்புகளைச் சிறப்பாகச் செய்தன.

பணிகளைக் கூட்டிணைக்கும் பொறுப்பை மாத்திரமே எமது புதிய கிராமங்கள் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சு செய்தது. இதனால், இந்திய உதவியுடனான பெருந்தோட்ட வீடமைப்புத் திட்டத்தில் முழுமையான வெளிப்படைத்தன்மை அன்று இருந்தது.

இன்று இந்த அரசசார்பற்ற நிறுவனங்கள் இந்தப் பொறுப்புகளில் இருந்து அதிரடியாக நீக்கப்பட்டுள்ளன. ஆகவே, வெளிப்படைத்தன்மை தொடர்பான கேள்விகள் எழுந்துள்ளன. எமது கேள்விகளைக் கண்டு எவரும் பதற்றமடையத் தேவையில்லை. நாம் நியாயமான கேள்விகளைத்தான் எழுப்புகின்றோம். அவற்றுக்குப் பொறுப்பில் உள்ளவர்கள் பதில் கூறக் கடமைப்பட்டுள்ளார்கள்.

இந்தியா ஒட்டுமொத்தமாக 46 ஆயிரம் வீடுகளை இலங்கையில் வடக்கு - கிழக்கிலும், 14 ஆயிரம் வீடுகளைப் பெருந்தோட்டங்களிலும் கட்டுவிக்கின்றது. இதில் மூன்று கட்டங்களில் வடக்கு - கிழக்கில் 46 ஆயிரம் வீடுகளும், பெருந்தோட்டங்களில் 4 ஆயிரம் வீடுகளும் பூர்த்தியடைந்துள்ளன. மிகுதி 10 ஆயிரம் வீடுகளில் 1,300 வீடுகள் நான்காம் கட்டத்தில் இன்று ஆரம்பித்து வைக்கபட்டுள்ளன.

முதல் மூன்று கட்டங்களிலும் மேற்சொன்ன நம்பகத்தன்மை கொண்ட அரசசார்பற்ற நிறுவனங்கள், கட்டுமான நடைமுறைப்படுத்தல், கண்காணிப்புப் பணிகளைச் செய்தன. அரச நிறுவனமான தேசிய வீடமைப்பு அதிகார சபையும் பங்கு வகித்தது. இந்த முறை, அரசசார்பற்ற நிறுவங்கள் அகற்றபட்டு முழுப் பொறுப்பும் அரச நிறுவனங்களான தேசிய வீடமைப்பு அதிகார சபை மற்றும் அரச பொறியியல் கூட்டுத்தாபனம் ஆகிய வற்றுக்கு மாத்திரம் வழங்கபட்டுள்ளன.

ஒரு வீடு, ரூபா இருபத்து எட்டு இலட்சம் என்ற மதிப்பீட்டுடன், 1,300 வீடுகளை கட்டும் பணி, எவரது கோரிக்கையின் பேரில், எக்காரணத்துக்காக அரச நிறுவனங்களுக்கு மாத்திரம் வழங்கபட்டுள்ளது என்ற கேள்வி மலைநாடு முழுக்க இன்று எதிரொலிகின்றது. அதையே, இந்திய வம்சாவளி மலையகத் தமிழ் மக்களின் அதிக வாக்குகளையும், மலையக தமிழ் மக்களின் ஆணையையும் பெற்ற தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் என்ற முறையில் நான் இங்கே எழுப்புகின்றேன்.

மேலும், இந்தத் திட்டம் தொடர்பில் “டெண்டர்” என்ற கேள்வி பத்திர கோரல் நிகழ்ந்து, கட்டுமான “கொன்றாக்ட்டர்” என்ற ஒப்பந்தக்காரர்கள் தெரிவு செய்யப்பட்டு விட்டனரா? அது நடந்து இருந்தால் எப்போது நடைபெற்றது? அதை நடத்திய நிறுவனங்கள் யாவை? “டெண்டர்” என்ற கேள்விப் பத்திர கோரல் தொடர்பில் அரச விதிமுறைகள் கடைப்பிடிக்கப்பட்டுள்ளனவா?

வீடுகளைக் கட்ட, தோட்ட நிறுவனங்கள் காணிகளை விடுவித்து உள்ளனவா? அவற்றுக்கு மண் சரிவு அபாயம் இல்லை என்ற தேசிய கட்டட ஆய்வு நிறுவனச் சான்றிதழ்கள் வழங்கபட்டுள்ளனவா? ஜனாதிபதி செயலகத்தில் இந்தப் பணிகள் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டபோது, அதற்குச் சமாந்திரமாக தோட்டங்களில் அடிக்கல்கள் நாட்டியவர்கள் யார்? அவர்கள் கட்டுமான “கொன்றாக்ட்” என்ற ஒப்பந்தத்தைப் பெற்றவர்களா?

இத்தகைய வெளிப்படைத்தன்மை தொடர்பான கேள்விகள் எழுந்துள்ளன. எமது கேள்விகளைக் கண்டு எவரும் பதற்றமடையத் தேவையில்லை. நாம் நியாயமான கேள்விகளைத்தான் எழுப்புகின்றோம். அவற்றுக்குப் பொறுப்பில் உள்ளவர்கள் பதில் கூறக் கடமைப் பட்டுள்ளார்கள்.” - என்றார்.

### ஓட்டோ விபத்தில்...

புளியாவத்தை பகுதியில் ஓட்டோ ஒன்று வீதியை விட்டு விலகி பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளானதில் இளைஞன் ஒருவர் பலியாகியுள்ளார். மேலும் மூவர் காயமடைந்துள்ளனர்.

இந்த விபத்து இன்று அதிகாலை இடம்பெற்றுள்ளது.

காயமடைந்தவர்கள் கிளங்கன் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

பொகவந்தலாவ, கெர்க்கஸ்வோல்ட் மேல்பிரிவு தோட்ட பகுதியில் நேற்று நடைபெற்ற திருமண வைபவத்தில் பங்கேற்றுவிட்டு, மேற்படி நபர்கள் ஓட்டோவில் வீடு திரும்பிக் கொண்டிருந்த போதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

மேற்படி விபத்தில் டிக்கோயா, புளியாவத்தை மேல்பிரிவு தோட்டத்தைச் சேர்ந்த 27 வயதுடைய தனபாலன் நிஷாந்தன் என்ற இளைஞனே உயிரிழந்துள்ளார்.

விபத்து தொடர்பான விசாரணைகளை நோர்வூட் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# நாட்டின் தேசிய உற்பத்திகளை மேம்படுத்த அரசாங்கம் அவதானம் செலுத்தவில்லை

## நாமல் ராஜபக்ஷ எம்.பி. குற்றச்சாட்டு

”தேசிய உற்பத்திகளை மேம்படுத்த அரசாங்கம் அவதானம் செலுத்துவதில்லை. சர்வதேச நாணய நிதியத்தின் அறிவுறுத்தல்களுக்கு அமைய மாத்திரம் செயற்பட்டால் சமூக கட்டமைப்பில் முரண்பாடுகள் மிகுதியாகும்.”

– இவ்வாறு பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

மஹரகம பகுதியில் நேற்று இடம்பெற்ற கூட்டத்தில் கலந்துக் கொணடு உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

“ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நாங்கள் தெரிவு செய்தோம். பொதுஜன பெரமுனவின் பெரும்பாலான உறுப்பினர்கள் அமைச்சு மற்றும் இராஜாங்க அமைச்சு பதவி வகிக்கிறார்கள்.




பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் தேசிய உற்பத்திகளை மேம்படுத்த அரசாங்கம் எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை.

சர்வதேச நாணய நிதியத்தின் பரிந்துரைகளை செயற்படுத்துவதை மாத்திரம் அரசாங்கம் பிரதான இலக்காகக் கொண்டுள்ளது. வரிகளை அதிகரித்து பொருளாதாரத்தை மேம்படுத்த முடியாது. நடுத்தர மக்களை பொருளாதார ரீதியில் நெருக்கடிக்குள்ளாக்கி நாடு என்ற ரீதியில் அபிவிருத்தியடைய முடியாது.

தேசிய உற்பத்திகளை மேம்படுத்த நடைமுறைக்கு சாத்தியமான திட்டங்கள் எதனையும் அரசாங்கம் செயற்படுத்துவதில்லை. கடன் பெறுவதை மாத்திரமே இலக்காகக் கொண்டுள்ளது. இந்த நிலைமை மாற்றம் பெற வேண்டும்.

அரசியலமைப்பின் பிரகாரம் இந்த ஆண்டு ஜனாதிபதி தேர்தல் இடம்பெறும்.தேர்தலுக்கு நாங்கள் தயாராகவே உள்ளோம்.கட்சியை பலப்படுத்தும் செயற்பாடுகளை நாடளாவிய ரீதியில் முன்னெடுப்போம்.” – என்றார்.

# அருள்மிகு மாதுமை ஆலய மகோற்சவம்

**(எம்.ஏ.ஏ.அக்தார்)**

கிழக்கு மாகாணம் அம்பாறை மாவட்டத்தில் பிரசித்தி பெற்ற பழம் பெரும் சிவாலயங்களில் ஒன்றான பனங்காடு அருள்மிகு மாதுமை ஸ்ரீபாசுபதேசுவரர் தேவஸ்தான வருடாந்த மகோற்சவ பெருவிழாவின் கொடியேற்றம் இடம்பெற்றுள்ளது.

ஆலயத்தில் இடம்பெற்ற கிரியைகளை தொடர்ந்து கொடிச்சீலை எடுத்து வருவதற்கான கிரியைகள் இடம்பெற்றன. மங்கள வாத்தியங்கள் முழங்க கொடிச்சீலையும் எடுத்துவரப்பட்டது. பின்னர் நடைபெற்ற யாக பூஜையுடன் பிரதான கும்ப பிரதட்சனையுடன் கொடிச்சீலையும் உள்வீதி வலமாக எடுத்து வரப்பட்டது.

தொடர்ந்து கொடிமரத்திற்கான அபிசேக பூஜைகள் நடைபெற்றன. பக்தர்களின் அரோகரா கோஷங்களுடன், மங்கள வாத்தியங்கள் முழங்க கொடியேற்றமும் இடம்பெற்றது.

கடந்த வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமான பிரம்மோற்சவப் பெருவிழாவின் சத 108 சங்காபிசேகம் 23 ஆம் திகதி இடம்பெறவுள்ளது. 24 ஆம் திகதி இடம்பெறும் தீர்த்தோற்சவத்துடன் மாலை கொடியிறக்கமும், 25 ஆம் திகதி இடம்பெறும் பூங்காவனத் திருவிழாவுடனும் 26 ஆம் திகதி இடம்பெறும் வைரவர் பூஜையுடனும் இந்த வருட விழா நிறைவுபெறவுள்ளது.







# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்


259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## பஸிலை விரட்டும் வினை

அரசியலில் முன்பின் அனுபவமே இல்லாத - கற்றுக்குட்டியான - கோட்டாபய ராஜபக்ஷவை பெரும் அரசியல் தலைவராக வேடம் காட்ட, மக்கள் மத்தியில் அவரை ஜனாதிபதியாகத் திணித்த பெரும் குற்றத்திற்காக ராஜபக்ஷக்களின் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன - மொட்டு கட்சி - இன்று அரசியல் முட்டுச் சந்தில் வந்து முட்டி மோதி, மேலும் நகர முடியாத இக்கட்டில் சிக்கி நிற்கின்றது.

சில காலம் அமெரிக்காவில் அஞ்ஞாத வாசம் முடித்துக் கொண்டு நாடு திரும்பி உள்ள மொட்டுக் கட்சியின் தேசிய அமைப்பாளரும் கோட்டாபய ராஜபக்ஷவின் இளைய சகோதரருமான பஸில் ராஜபக்ஷ இப்போது தெற்கு ஊடகங்களுக்கு வழங்கி இருக்கும் அரசியல் பேட்டி, அவரது கட்சி முட்டுச்சந்தில், மேலே நகர முடியாது மாட்டி நிற்பதையே உணர்த்தி நிற்கின்றது.

பஸில் ராஜபக்ஷவின் அண்மைக்கால இரண்டு இலங்கை வருகைகள் முக்கியமானவை. அவற்றில் ஒரு பொதுத் தன்மை இருப்பதும் கவனிக்கத்தக்கது.

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவியேற்றுச் சற்றுக் காலத்தில் - 2021 நடுப்பகுதியில் - நாடு பெரும் பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொள்ளத் தொடங்கியிருந்த சமயமும் பஸில் ராஜபக்ஷ இப்படி அமெரிக்காவில் அஞ்ஞாதவாசத்தில் இருந்தார்.

ஏழு மூளைசாலியான பஸில் ராஜபக்ஷ நாடு திரும்பி, நாட்டின் பொருளாதார நிலைமையைத் தமது சமயோசிதத்தாலும் புத்திசாதுரியத்தாலும் தூக்கி நிறுத்துவார் என்றெல்லாம் பெரும் பிரசாரங்கள் அப்போது முன்னெடுக்கப்பட்டன. அவருக்கு நாடாளுமன்றில் இடமளிப்பதற்காக அரசமைப்பு திருத்தங்கள் கூட செய்யப்பட்டன. அவர் நாடு திரும்பினார். எம்.பியானார். நிதியமைச்சர்மானார். ஆனால், அதனால் பெரிய நன்மை ஒன்றும் பொருளாதார ரீதியில் நாட்டுக்குக் கிடைத்துவிடவில்லை. நிதி அமைச்சராக நாடாளுமன்றத்தில் ஒரு வரவு - செலவுத் திட்ட உரையை முழுமையாக ஆற்ற முடியாதவராக பஸில் அல்லாடினார். தவிரவும் நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு எந்தத் தீர்வையும் அவர் காணவில்லை. முன்வைக்கவில்லை. கொஞ்சம் விளக்கமாகச் சொல்வதானால் இருந்த நெருக்கடிகளை அவர் இன்னும் தீவிரமாக்கினார் என்றுதான் கூற வேண்டும்.

அப்போது பஸிலின் வருகை மூலம் பல பிரச்சினைகள் தீரும் என்று மொட்டுக் கட்சியினர் ஆவலோடு எதிர்பார்த்தமை போலத்தான் இப்போதும் அவரது வருகையுடன் கட்சியின் பல அரசியல் பிரச்சினைகள் தீர்ந்து விடுமென அவரது மொட்டுக் கட்சியினர் கனவு கண்டு, ஆவலுடன் காத்திருந்தனர்.

இப்போதும் அவரது மீள்வருகை கட்சிக்குள் அப்படி ஒன்றையும் பெரிதாக வெட்டிச் சாய்த்து விடாது என்பதை அவரது கட்சியினர் குறுகிய காலத்திலேயே உணரத் தலைப்படும் சூழ்நிலை ஏற்பட்டு இருக்கின்றது.

உடனடியாக ஜனாதிபதி தேர்தலை எதிர்கொள்வதற்கு மொட்டுக் கட்சியில் பொருத்தமான வேட்பாளர் எவரும் இல்லை என்பதை பஸில் ராஜபக்ஷ பகிரங்கமாக ஒப்புக் கொண்டிருக்கின்றமையும் -

இப்போதைய நிலையில் ரணில் விக்கிரமசிங்கவே பொருத்தமான ஜனாதிபதி என்பதை பஸில் ராஜபக்ஷ ஏற்றுக் கொண்டிருக்கின்றமையும் -

மொட்டுக் கட்சி தொடர்பான அவரது இயலலாத் தன்மையை - கையறு நிலையை - எடுத்துக்காட்டுகின்றனவாகவே கொள்ள வேண்டும்.

ஜனாதிபதித் தேர்தல் முதலில் நடந்தால் பின்னர் நடைபெறக்கூடிய நாடாளுமன்றத் தேர்தலில் தமது மொட்டுக் கட்சி எப்படியும் அடிபட்டு போகும் என்ற கணக்கு பஸில் ராஜபக்ஷவுக்கு நன்கு புரியவே செய்கின்றது.

ஜனாதிபதித் தேர்தலில் யார் வென்றாலும் அது மொட்டுக்கட்சிக்குச் சிக்கல் தான்.

மொட்டுத்தரப்பின் ஆதரவுடன் நின்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வென்றாலும், அதன் பின்னர் வரும் பொதுத் தேர்தலில் அவரது ஐக்கிய தேசியக் கட்சி விதிக்கும் நிபந்தனைகளுக்கு மொட்டு இணங்கிப் போக வேண்டி இருக்கும்.

மொட்டுவின் ஆதரவு பெறாதவர் ஜனாதிபதியாகத் தேர்தலில் வென்றாலும் அதன் பின்னர் நடைபெறக்கூடிய தேர்தலில் மொட்டுக்கட்சி மலராமலேயே போய்விடும் ஆபத்தும் உண்டு.

கோட்டாபயவை ஜனாதிபதியாக்கியமையின் பிரதிபலனை பஸிலும் அவரது மொட்டுக் கட்சியினரும் அனுபவித்துத்தானாக வேண்டும். அந்த வினையின் பயனிலிருந்து பஸில் தரப்பினர் தப்ப முடியாது.

# கிழக்குப் பல்கலைக்கழகத்தில் சர்வதேச மகளிர் தின விழா



(பழுவூரான்)

“பெண்களின் வளர்ச்சியினையும் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தியினையும் மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டு அதனை உள்வாங்கும் உயரிய எண்ணக்கருவை சமூகத்தில் ஊட்டுவோம்“ எனும் இவ்வாண்டின் சர்வதேச மகளிர் தின தொனிப்பொருளுக்குச் செயல் வடிவம் கொடுக்கும் பொருட்டு கிழக்குப் பல்கலைக்கழக பாலின சமநிலை மற்றும் சமத்துவப் பிரிவினரால் முதன்முறையாக ஏற்பாடு செய்யப்பட்ட “சர்வதேச மகளிர் தினம் 2024“ நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன.

கடந்த வியாழக்கிழமை கிழக்குப் பல்கலைக்கழக நல்லையா மண்டபத்தில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இந்த விழாவில், மட்டக்களப்பு மாவட்டத்தின் 14 செயலகப் பிரிவுகளில் தொழில் முயற்சிக்கும் சமூக சேவைக்கும் கூடிய பங்களிப்புச் செய்த 14 பெண் தொழில் முயற்சியாளர்களும், 14 பெண் சமூக சேவையாளர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் வ.கனகசிங்கம் பிரதம அதிதியாக கலந்து கொண்ட இந்த நிகழ்வில், மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜெஸ்டீனா முரளிதரன் சிறப்பு விருந்தினராகவும், கிழக்குப் பல்கலைக்கழக பிரதி உபவேந்தர் கலாநிதி த.பிரபாகரன் கௌரவ விருந்தினராகவும் கலந்து சிறப்பித்தனர்.

இந்த நிகழ்வில், பல்கலைக்கழக பீடாதிபதிகள், கல்விசார் ஊழியர்கள், நிர்வாக உத்தியோகத்தர்கள், கல்விசார ஊழியர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பாத்து மக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# வெளிநாட்டுத் தூதுவர்கள் கிழக்கு ஆளுநருடன் சந்திப்பு



சுவிட்சர்லாந்து, ஜப்பான் மற்றும் தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளின் தூதுவர்கள் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

திருகோணமலையில் உள்ள ஆளுநரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று மரியாதை நிமித்தம் அவர்கள் சந்தித்தனர்.

இதன்போது கிழக்கு மாகாணத்திற்கான அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டுள்ளது.

அத்துடன், கிழக்கு மாகாணத்தின் எதிர்கால அபிவிருத்தி முயற்சிகளுக்கு தாம் ஆதரவளிப்பதாகவும் தூதுவர்கள் தெரிவித்தனர்.

இந்த சந்திப்பில் மாகாண பிரதம செயலாளர் ஆர்.எம்.பி.எஸ்.ரத்நாயக்க, ஆளுநர் செயலக செயலாளர் எல்.பி. மதநாயக்க உள்ளிட்டோரும் உடனிருந்தனர்.

# மட்டக்களப்பு ஷேன் பாலர் பாடசாலையில் இரத்ததானம்



(பழுவூரான்)

மட்டக்களப்பு ஷேன் பாலர் பாட சாலையின் ஏற்பாட்டில் இரத்த தானம் முகாமொன்று நேற்று பாலர் பாடசா லையில் இடம்பெற்றது.

வருடாவருடம் பாலர் பாடசாலை யினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற பொதுத் தேவைகளை பூர்த்தி செய்யும் செயற்பாடுகளில் இவ்வருடம் மட்டக் களப்பு போதனா வைத்தியசாலையின் குருதி வங்கியில் நிலவுகின்ற பற்றாக் குறையினை நிவர்த்தி செய்யும் முகமாக இந்த இரத்ததான முகாம் ஒழுங்கு செய்யப்பட்டது.

பாலர் பாடசாலையினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த இரத்ததான முகா மில் பெற்றோர்கள், இளைஞர்கள் எனப் பெருமளவிலானோர் கலந்து கொண்டு குருதிக்கொடை வழங்கியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.














# மடத்தடி மீனாட்சி அம்மன் ஆலயத்தின் வருடாந்த மகா சங்காபிஷேக நிகழ்வு

( வி.ரி.சகாதேவராஜா)

வரலாற்று பிரசித்தி பெற்ற நிந்தவூர் மடத்தடி மீனாட்சி அம்மன் ஆலயத்தின் வருடாந்த மகா சங்காபிஷேக நிகழ்வு நேற்று வெகு சிறப்பாக நடைபெற்றது.

108 சங்காபிஷேக நிகழ்வு ஆலய பிரதம குரு சிவ ஸ்ரீ சண்முக மகேஸ்வரக் குருக்கள், ஆலயகுரு சிவசிறி ஹோவர்த்தன சர்மா தலைமையிலான சிவாச்சாரியார்கள் முன்னிலையில் காலை 9.00 மணி முதல் சங்காபிஷேக கிரியைகள் நடைபெற்றன.

முன்னதாக ஆலய பரிபாலன சபையின் தலைவர் கலாநிதி கி.ஜெயசிறில் முன்னிலையில் சிவலிங்க அபிஷேகம் இடம்பெற்றது.

இராமகிருஷ்ண மிஷன் மட்டக்களப்பு ஆச்சிரம பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் ,

அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன், ஜனாதிபதி செயலணியின் கிழக்கு மாகாண இணைப்பாளர் கணபதிப்பிள்ளை மோகன், வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கலாநிதி எம். கோபாலரெத்தினம், ஆலய பரிபாலன சபை ஆலோசகர் உதவிக் கல்விப் பணிப்பாளர் விபுலமாமணி வி.ரி. சகாதேவராஜா உள்ளிட்ட பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

அத்துடன், மரகதம் நூல் வெளியீடும், அன்னதானமும் இடம்பெற்றன.

இந்த மகா சங்காபிஷேக நிகழ்வில் சுமார் ஆயிரம் அடியார்கள் கலந்து கொண்டார்கள்.
















# கிண்ணியா அல் மினாவில் வருடாந்த பரிசளிப்பு விழா

**(கிண்ணியா நிருபர்)**

கிண்ணியா வலயக் கல்வி அலுவலகத்துக்குட்பட்ட கிண்ணியா பூவரசந்தீவு அல்மினா மஹா வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா வித்யாலயா கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

கடந்த வருடம் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களையும், க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் சித்தியடைந்த பல்கலைக்கழகம் தெரிவான மாணவர்களையும் கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெற்றது.

அத்துடன், ஐந்தாம் தர புலமை பரிசில் பரீட்சையில் சித்தி அடைந்த மாணவர்களையும் வகுப்பு ரீதியாக முதலாம் இரண்டாம் மூன்றாம் இடங்களை பெற்ற மாணவர்களையும் பாராட்டி கௌரவிப்பும் இடம் பெற்றது.

கடந்த காலங்களில் இந்த பாடசாலையில் கடமையாற்றி வேறு பாடசாலைக்கு இடமாற்றம் பெற்றுச்சென்ற ஆசிரியர்களையும் அவர்களது சேவையையும் பாராட்டி கௌரவிப்பும் இடம் பெற்றது.

பாடசாலை அதிபர் எம்.வை ஹதியத்துல்லா தலைமையின் நடைபெற்ற இந்த நிகழ்வில், கிண்ணியா வலயக் கல்வி அலுவலகத்தின் கல்வி அபிவிருத்திக்குப் பொறுப்பான உதவிப் பணிப்பாளர் செய்யது அஹ்மது, பாடசாலை அபிவிருத்தி மேம்பாட்டு இணைப்பாளர் ஏ.ஆர் ஹஸ்ஸாலி, பாடசாலை அபிவிருத்தி செயலாளர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.













# சாய்ந்தமருது அல் ஹிலால் மாணவர்களுடன் இளங்கலை பட்டதாரிகள் அமைப்பு சந்திப்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

சாய்ந்தமருது அல் ஹிலால் வித்தியாலய மாணவர்களுடன் அவர்களின் கல்வித் தேவைகள் குறித்து சாய்ந்தமருது இளங்கலை பட்டதாரிகள் அமைப்பு சிநேகபூர்வ கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளனர்.

சாய்ந்தமருது அல்-ஹிலால் வித்தியாலயத்தில் 2024/25 ஆம் கல்வியாண்டுக்கான (க.பொ.த) சாதாரண தர புதிய வகுப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பிராந்தியத்தில் மாணவர்களின் கல்வி நிலையை மேம்படுத்தும் நோக்கத்துடன் இளங்கலை பட்டதாரிகள் அமைப்பு இலவச மேலதிக வகுப்புகள் மற்றும் கருத்தரங்குகளை ஏற்பாடு செய்ய உத்தேசித்துள்ளது.

மாணவர்களுக்கு உண்மையில் என்ன வகையான கல்வித் தேவைகள் உள்ளன என்பதை கண்டறிய, மாணவர்களுடன் நேரடியான நட்புரீதியான கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டு அமைப்பின் தலைவர் ஏ.ஜி.எம். இக்லாஸ் களத்திற்கு நேரடியாக சென்று மாணவர்களுடன் உரையாடினார்.



# பண்டிகை காலத்தையொட்டி வேலைவாய்ப்பு வீதம் அதிகரிப்பு

பண்டிகை காலத்தையொட்டி நிறுவனங்களுக்கு புதிய பணியாளர்களை உள்வாங்குதல் காரணமாக நாட்டில் வேலைவாய்ப்பு வீதம் அதிகரித்துள்ளது.

அதன்படி கடந்த ஜனவரி மாதத்தில் 48.5 சதவீதமாக காணப்பட்ட வேலைவாய்ப்பு வீதம் பெப்ரவரி மாதத்தில் 51 சதவீதமாக அதிகரித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

அத்துடன், பெப்ரவரி மாதத்தில் பணிகளுக்கான இலங்கை கொள்வனவாளர் முகாமையாளர் சுட்டெண் 53 புள்ளிகளாக பதிவாகியுள்ளது.

அத்தோடு, போக்குவரத்து மற்றும் நிதிச் சேவைகளின் துணைத் துறைகளிலும் மேம்பாடுகளை அவதானிக்க கூடியதாக உள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

# இலங்கை அரசை இந்திய மத்திய அரசு வெளிப்படையாக கண்டிக்காதது ஏன்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் கேள்வி

படகுகளை பறிமுதல் செய்து அரசுடைமையாக்கப்பட்டது என இலங்கை அரசு அறிவிக்கும் நிலையில், இந்திய அரசு அதிகாரப்பூர்வமாக, வெளிப்படையாக இதனை கண்டிக்காதது ஏன் என தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கேள்வி எழுப்பியுள்ளார்.

பிரதமர் நரேந்திர மோடி தமிழகம் – கன்னியாகுமரியில் நேற்று முன்தினம் நடைபெற்ற பாரதிய ஜனதாக் கட்சியின் பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு மீனவர் பிரச்சினைகள் தொடர்பில் தெரிவித்த கருத்துகளுக்கு தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தனது எக்ஸ் தளத்தில் எதிர்ப்பினை வெளியிட்டுள்ளார்.

கடந்த காலங்களில் திராவிட முன்னேற்றக் கழகம் செய்த செயல்களாலேயே, இலங்கை அரசால் இன்று தமிழ்நாட்டு மீனவர்கள் இன்னலுக்கு உள்ளாகின்றார்கள் என பிரதமர் பதவியில் இருக்கும் நரேந்திர மோடி கூறியுள்ளார் என தமிழக முதலைமைச்சர் மு.க.ஸ்டாலின் குறிப்பிட்டுள்ளார்.

தி.மு.க. அரசின் கடும் எதிர்ப்பையும் மீறியே, கச்சதீவு இலங்கைக்கு தாரை வார்க்கப்பட்டது என்ற உண்மை வரலாற்றைத் தமிழ்நாட்டு மக்கள் நன்கறிவார்கள். இந்த நிலையில், நாட்டின் ஒரு பகுதியை மாநில அரசால் மற்றுமொரு நாட்டுக்கு வழங்க முடியும் என நம்பும் அளவுக்கு பிரதமர் அப்பாவியாக இருக்கிறாரா என தமிழக முதலமைச்சர் மு.க ஸ்டாலின் கேள்வி எழுப்பியுள்ளார்.

கச்சதீவை மீட்பதற்கு கடந்த 10 ஆண்டுகளில் பாரதிய ஜனதாக் கட்சி அரசு எடுத்த நடவடிக்கை என்ன எனவும், தமிழ்நாட்டு மீனவர்கள் இலங்கை அரசால் தொடர்ந்து சிறைப்பிடிக்கப்படுவதையும் சித்திரவதைக்கு உள்ளாவதையும் தடுத்து நிறுத்தாதது ஏன் எனவும் அவர்கள் இந்தியர்கள் இல்லையா எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

அதானி நிறுவனத்தின் வர்த்தக நலன்களுக்காக இலங்கை அரசுக்கு அழுத்தம் வழங்கிய ஒன்றிய பாரதிய ஜனதாக் கட்சி அரசு இந்திய மீனவர்களின் பாரம்பரிய உரிமைக்காக வாய் திறக்காதது ஏன் எனவும் வினவியுள்ளார்.

இதேவேளை, மீனவர் பிரச்சினை தொடர்பில் இந்தியா – இலங்கை இடையேயான கூட்டு நடவடிக்கை குழுவை விரைவில் கூட்டி நடவடிக்கை எடுக்க வேண்டுமென தமிழக முதலமைச்சர் மு.க ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டுள்ள 15 மீனவர்களையும், படகுகளையும் விடுவிக்க உடனடியாக நடவடிக்கை எடுக்கக் கோரி மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் கலாநிதி சுப்ரமணியம் ஜெய்சங்கருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ச்சியாக மீனவர்கள் இவ்வாறு கைது செய்யப்படுவதால், மீனவர்களின் வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாவும் அவர் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.



# அடுத்த வாரம் பூடான் செல்கிறார் பிரதமர் மோடி

இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள பூடான் பிரதமர் ஷெரிங் டோப்கே, பிரதமர் நரேந்திர மோடியை நேற்று முன்தினம் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இந்த நிலையில், அவரது அழைப்பை ஏற்று, பிரதமர் மோடி அடுத்த வாரம் பூடான் செல்கிறார்.

பூடான் மன்னர் ஜிக்மே கேசர் நம்கேல் வாங்சக் கடந்தாண்டு நவம்பரில் இந்தியா வந்தார். அப்போது, அவர் பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்து பூடான் வரும்படி அழைப்பு விடுத்தார்.

இந்த நிலையில் பூடான் பிரதமராக ஷெரிங் டோப்கே கடந்த பெப்ரவரி மாதம் பொறுப்பேற்றார். அவர் தனது முதல் உத்தியோகபூர்வ பயணமாக நேற்று இந்தியா சென்றார். டில்லியில் குடியரசு தலைவர் திரவுபதி முர்முவைபூடான் பிரதமர் ஷெரிங்டோப்கே சந்தித்து பேசினார்.

பின்னர் பிரதமர் மோடியை அவர் சந்தித்து இருதரப்பு பேச்சுவார்த்தை நடத்தினார். உள்கட்டமைப்பு வளர்ச்சி, போக்குவரத்து, எரிசக்தி, நீர்மின்சக்தி, கூட்டுறவு ஆகிய துறைகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்து இரு தலைவர்களும் ஆய்வு செய்தனர்.

அத்துடன், பூடானின் வளர்ச்சியில் இந்தியா நம்பிக்கைக்குரிய பங்கு தாரராக இருப்பதை பூடான் பிரதமர் ஷெரிங் டோப்கே வெகுவாக பாராட்டினார்.

# கச்சதீவு விவகாரத்தில் கருணாநிதி துரோகம்

## தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை குற்றச்சாட்டு

கச்சதீவை மீட்க கடந்த 10 ஆண்டுகளில் பா.ஜ.க. அரசு செய்தது என்ன? தமிழக மீனவர்கள் தொடர்ந்து சிறைபடுவதையும், சித்ரவதைக்கு ஆளா வதையும் தடுத்து நிறுத்தாதது ஏன்? தமிழகத்துக்கு செய்து கொடுத்த சிறப்பு திட்டங்கள் என்ன? என கேட்டு, விஷ்வகுரு என மார்தட்டிக் கொள்ளும் பிரதமர் மௌனகுருவாக இருப்பது ஏன்? என முதல்வர் ஸ்டாலின் கேள்வி எழுப்பியிருந்தார்.

இதற்கு பதிலளித்து, பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலை தனது எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

“கடந்த 1974 ம் ஆண்டு தமிழகத்தில் திமுக ஆட்சியில் இருந்த போது, மத்தியில் இருந்த காங்கிரஸ் அரசால், கச்சதீவு இலங்கைக்குத் தாரை வார்க்கப்பட்டது. அதன் பிறகு பல முறை, மத்திய அரசில், பசையான அமைச்சர் பதவிகளை மட்டும் வாங்கிக் கொண்டு, கச்சதீவு விவகாரத்தில் கள்ள மௌனம் மட்டுமே சாதித்துக் கொண்டிருக்கும் தி.மு.கவுக்கு, தேர்தல் காலங் களில் மட்டுமே அதன் ஞாபகம் வருவது விந்தை. கச்சத்தீவு விஷயத்தில் தி.மு.கவின் மறைந்த தலைவர் கருணாநிதி செய்தது துரோகம்.

தி.மு.க. காங்கிரஸ் கூட்டணி ஆட்சியின் போது, இலங்கை கடற்படையினரால் 80 இற்கும் மேற்பட்ட தமிழக மீனவர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட போது, தமிழக மீனவர்கள் உயிரைக் காப்பாற்ற தி.மு.க. எடுத்த நடவடிக்கை வெறும் மௌனமே. கடந்த 2014 ஆம் ஆண்டு இலங்கை அரசால் தமிழக மீனவர்களுக்குத் தூக்கு தண்டனை விதிக்கப்பட்ட போது, தி.மு.க. அன்றும் மௌனமாகத்தான் இருந்தது. அவர்களை பத்திரமாக மீட்டவர் பிரதமர் மோடி தான்.

மோடி பிரதமராக பொறுப்பேற்ற பிறகு இலங்கை கடற்படையால் கைது செய்யப்படும் மீனவர்கள், உடனுக்குடன் மீட்கப்படுகிறார்கள். ஒட்டுமொத்த பாரத நாடும், நமது மீனவர்களுக்கு உறுதுணையாக நிற்கிறது. கச்சதீவை விட்டுக் கொடுத்து, தமிழக மீனவர்கள் வாழ்வாதாரத்தைப் பாதிப்புக்குள்ளாக்கி விட்டு, ஐம்பது ஆண்டுகள் மௌனமாக இருந்து கொண்டு, தேர்தல் நேரத் தில் மட்டும் கச்சதீவு குறித்துப் பேசும் ஸ்டாலின் சுயபரிசோதனை செய்ய வேண்டியம் நேரம் இது.” – என்று குறிப்பிட்டுள்ளார்.



# உக்ரைனுக்கு வழங்கப்படவுள்ள ஆயுதங்கள்: உடனடி கொள்வனவுக்கு தயாராகும் ஜேர்மன்

ஜேர்மன் சேன்ஸலர் ஓலாஃப் ஷோல்ஸ், பிரான்ஸ் ஜனாதிபதியான இமானுவல் மேக்ரான், போலந்து பிரதமரான டொனால்ட் டஸ்க் ஆகியோரை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இந்த சந்திப்பானது ஜேர்மன் தலைநகர் பெர்லினில் இடம்பெற்றுள்ளது.

இந்த சந்திப்பில், உக்ரைனுக்கு ஆதரவளிப்பது தொடர்பில் முக்கியமாக கலந்துரையாடப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

ரஷ்யா உக்ரைன் போரில், உக்ரைனுக்கு ஆயுதங்கள் வழங்குவது, ரஷ்யாவுடன் நேரடியாக மோதுவது போலாகிவிடும் என்று கருதி, உக்ரைனுக்கு ஆயுதங்கள் வழங்க ஜேர்மனி தயக்கம் காட்டிவந்தது.

ஏற்கனவே, பிரான்ஸ் ஜனாதிபதி மேக்ரான், உக்ரைனுக்கு உதவுவது தொடர்பில் வெளிப்படையாக பேசி



வருகிறார்.

இந்நிலையில், மேக்ரான் மற்றும் போலந்து பிரதமரான டொனால்ட் டஸ்க் உடனான சந்திப்பைத் தொடர்ந்து, ஜேர்மன் சேன்சலரான ஓலாஃப் ஷோல்ஸ், அறிவிப்பொன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிவிப்பில், உக்ரைனுக்கு வழங்குவதற்காக, உடனடியாக ஆயுதங்களை வாங்க இருப்பதாக ஷோல்ஸ் தெரிவித்தார்.

உலக ஆயுதங்கள் சந்தையில் அந்த ஆயுதங்களை வாங்க இருப்பதாக தெரிவித்த ஷோல்ஸ், உக்ரைனில் இருக்கும் கூட்டாளர்களுடன் தாங்களும் இராணுவ ஆயுத உற்பத்தியை அதிகரிக்க இருக்கின்றோம் என தெரிவித்துள்ளார்.







# உக்ரைனுக்கு நேட்டோவை அனுப்புவது மூன்றாம் உலகப் போருக்கு வழிவகுக்கும்

## இத்தாலியின் வெளியுறவு அமைச்சர் தெரிவிப்பு

உக்ரைனுக்கு நேட்டோ படைகளை அனுப்புவது மூன்றாம் உலகப் போர் வெடிக்கும் அபாயத்தை ஏற்படுத்தும் என்று இத்தாலியின் வெளியுறவு அமைச்சர் அன்டோனியோ தஜானி எச்சரித்துள்ளார்.

ரஷ்யாவிற்கு எதிராகப் போரை நடத்த நாட்டிற்குள் நுழைவது என்பது மூன்றாம் உலகப் போருக்கு வழிவகுக்கும் என இத்தாலிய நகரமான வெரோனாவில் நடந்த ஒரு நிகழ்வில் அவர் கூறியுள்ளார்.

பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மெக்ரோன் உக்ரைனை அதன் ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக பாதுகாக்க துருப்புக்களை அனுப்பும் யோசனையை முன்வைத்த பின்னர் இத்தாலியின் வெளியுறவு அமைச்சர் இந்த கருத்துக்கள் வந்துள்ளன.

இந்த நிலையில், உக்ரைனின் நகரான ஒடேசாவின் குடியிருப்புப் பகுதி மீது ரஷ்யா நடத்திய தாக்குதலுக்கு தகுந்த பதிலடி தரப்படும் என்று உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி எச்சரித்துள்ளார்.

உக்ரைன்– ஒடேசாவின் குடியிருப்பு பகுதி மீது வீசப்பட்ட குண்டுகளால் கட்டடங்கள் இடிந்து 20 பேர் உயிரிழந்தனர். 70 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

இந்த நிலையில், உக்ரைன் ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.



# ரெய்க்ஜேன்ஸ் தீபகற்பத்தில் மீண்டும் எரிமலை வெடிப்பு

ஐஸ்லாந்தின் ரெய்க்ஜேன்ஸ் தீபகற்பத்தில் கடந்த டிசம்பர் மாதத்தில் இருந்து நான்காவது முறையாகவும் எரிமலை வெடித்துள்ளது.

ரெய்க்ஜேன்ஸ் தீபகற்பத்தில் உள்ள ஸ்டோரா ஸ்கோக்ஃபெல் மற்றும் ஹகாஃபெல் இடையே எரிமலை வெடிப்பு ஆரம்பமாகியுள்ளதாக ஐஸ்லாந்தின் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என தெரிவிக்கப்படுகிறது.



பக்கங்கள் 05

கனடா முரசு

ஞாயிற்றுக்கிழமை 17/03/2024

## தமிழ்ச் சகோதரங்கள் மல்யுத்தத்தில் சாதனை

ஒன்ராரியோ,மார்ச் 17
கனடாவின் தேசிய மல்யுத்தப் போட்டிகளில் தமிழ் சகோதரங்கள்தங்கப்பதக்கத்தை வென்றுளளனர்.

C2

# அரசுத் தலைவராகத் நீடிப்பதில் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ உறுதி



**கியூபெக்,மார்ச்17**
**பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ வெள்ளிக் கிழமை ரேடியோ-கனடாவிற்கு அளித்த பேட்டியில் அரசாங்கத் தலை வராகத் தாம் தொடர்ந்தும் இருக்கப் போகிறார் என உறுதியளித்துள்ளார்.**


**இந்தப் பதவியுடன் வரும் சவால்கள் குறித்து தமக்குத் தெரியும் எனவும் அவர் கூறியுள்ளார்.**

இருப்பினும், குறிப்பிடத்தக்க உள்நாட்டு மற்றும் சர்வதேச சவால்கள் அவரை பதவியில் இருக்கவும் அடுத்த ஆண்டு திட்டமிடப்பட்ட அடுத்த கூட்டாட்சி தேர்தலை எதிர்கொள்ளவும் தூண்டுகிறது என்று ட்ஷரூடோ தெரிவித்துள்ளார்.

பெண்களின் உரிமைகள், டுபுடீவுஞ உரிமைகள் மற்றும் காலநிலை மாற்றத்தை எதிர்த்துப் போராடும் முன்னேற்றம் ஆகியவை கனடாவில் தற்போது ஆபத்தில் இருப்பதாக ட்ரூடோ கூறியுள்ள பிரச்சினைகளில் ஒன்றாகும்.

கனேடியர்கள் எந்த மாதிரியான நாட்டைப் பெற விரும்புகிறார்கள் என்பது குறித்து அடுத்த தேர்தலில் அடிப்படைத் தேர்வுகளை மேற்கொள்ள வேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

# பிரிட்டிஷ் கொலம்பியா பகுதியில் இவ்வாண்டு நீடித்த குளிர்காலம்!



பிரிட்டிஷ் கொலம்பியா,மார்ச் 17
இந்த ஆண்டு பிரிட்டிஷ் கொலம்பியாவில் குளிர்காலம் மிகவும் அதிகமாக இருந்தது,

குளிர்கால பருவத்தின் இறுதி முழு வாரம் இதுவாகும்.

வசந்த காலம் அதிகாரப்பூர்வமாக நாளை மறுதினம் மார்ச் 19, செவ்வாய் அன்று ஆரம்பிக்கிறது. மார்ச் இடைவேளையின் நேரத்துடன் சரியாகச் சீரமைக்கப்பட்டு, மாநிலத்தின் பெரும் பகுதி முழுவதும் தொடங்க உள்ளது.

வசந்த கால இடைவெளி மற்றும் புதிய பருவத்தின் வருகைக்கு வானிலை நிலைமைகள் சரியாக ஒத்துப்போகும், வசந்த காலத்தின் பிற்பகுதியைப் போன்றும், கோடையின் ஆரம்ப காலம் போன்றும் வரும் நாளகளில் வானிலையை உணர முடியும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.




# 30 மணிநேர ஆயுத மோதல் ஒருவர் கொலையுடன் முடிவு

## கல்கரியின் தென்கிழக்கு சுற்றுப்புறத்தில் சம்பவம்

அல்பேர்ட்டா,மாரச்17

கல்கரியின், தென்கிழக்கு சுற்றுப் புறத்தில் வசிப்பவர்கள் சிலரை அவர் களது வீடுகளில் இருந்து வெளியேற்றிய 30 மணிநேர ஆயுத மோதல் வெள் ளிக்கிழமை இரவு அதிகாரிகள் ஒரு வரை சுட்டுக் கொன்றதை அடுத்து முடிவுக்கு வந்தது.

வியாழன் மதியம் முதல் பென்புரூக் மெடோவ்ஸ் சுற்றுப்புறத்தில் உள்ள ஒரு வீட்டிற்கு வெளியே பொலிஸார் நிறுத்தப்பட்டிருந்தனர்,

வீட்டிற்கு கதவை மூடிக்கொண்டு அதிகாரிகளை துப்பாக்கியால் சுட்டுக் கொண்டிருந்த சந்தேகநபர் ஒருவருடன் பேச்சுவார்த்தை நடத்த பொலிஸார் முயன்றனர்.

வெள்ளிக்கிழமை இரவு சுமார் 8:30 மணியளவில் 'நிலைமை மோசமடை வதற்கு' முன்பு வீட்டிற்குள் இருந்து சுமார் 100 துப்பாக்கிச் சூடுகள் நடத்தப் பட்டன எனப் பொலிஸார் தெரிவித் துள்ளனர்.

எனினும், இதன் பின்னர் சந்தேகநபர் எவ்வாறு உயிரிழந்தார் என்பது தொடர் பில் பொலிஸார் எவ்விததகவல்களையும் வழங்கவில்லை.




**தமிழ்ச்...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஆஹரன் பிரணவன் மற்றும் அட் சயா பிரணவன் ஆகிய இரு சகோத ரர்களே 17 வயதுக்குட்பட்டோருக்கான தேசிய மல்யுத்தப் போட்டியில் தங்கப் பதக்கத்தை வென்றுள்ளனர்.

மார்ச் 14ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட கனடாவின் தேசிய மல்யுத்தப் போட்டி களின் தேசிய வெற்றியாளர்களாக இவர்கள் இருவரும் அறிவிக்கப் பட்டுள்ளனர்.

ஆஹரன் பிரணவன் 51 கிலோ பிரிவிலும், அவரின் சகோதரி அட்சயா பிரணவன் 49 கிலோ பிரிவிலும் வெற்றி வாகை சூடியுள்ளனர்.

# குணம்ஸ் சுப்பர் மார்க்கட்

## GUNAAM'S SUPER MARKET

## Super Deal of this Week

### till March 17th




LOWEST PRICE
~~10.99$~~
8.99
Only at GUNAAM'S SUPER MARKET

LOWEST PRICE
~~19.99$~~
15.99
Only at GUNAAM'S SUPER MARKET






LOWEST PRICE
LB
7.99$
Only at GUNAAM'S SUPER MARKET

ஊர் ஆட்டிறைச்சி



LOWEST PRICE
LB
6.99$
Only at GUNAAM'S SUPER MARKET

Ceylon விளைமீன்

## Gunaam's super market இந்த வாரம் Super Special Deal

நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட அனைத்து விதமான மீன்களையும் மிக மிகக் குறைந்த விலையில் fresh ஆக பெற்றுக்கொள்ளலாம்.

| | | | |
|---|---|---|---|
| Ceylon விளைமீன் | - $7.99 lb | Ceylon சீலா Fish | - $8.99 lb |
| Ceylon ஓரா | - $6.99 lb | Ceylon கொடுவா Fish | - $8.99 lb |
| Ceylon கும்பிளா | - $6.99 lb | Ceylon முழு King Fish | - $9.99 lb |
| Ceylon திரளி | - $7.99 lb | Ceylon CRAB | - $10.99 lb |
| Ceylon காரல் | - $7.99 lb | ஊர் ஆட்டிறைச்சி | - $7.99 lb |
| சின்னற்றிப் பாரை | - $8.99 lb | காட்டுப் பன்றி | - $4.99 lb |

1145 Morningside Ave Unit #33, Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998



# பல்கலை மாணவிகள் குளிப்பதை களவாகப் படம் எடுத்தவர் கைது!

## 19 வயது சர்வதேச மாணவரே சிக்கினார்

ஒன்ராரியோ,மார்ச்17

டொரன்ரோ பல்கலைக்கழகத்தில் மாணவிகள் குளித்தபோது படம் எடுக் கப்பட்டதையடுத்து சந்தேகநபரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஜனவரி மற்றும் மார்ச் 2024 க்கு இடையில், சந்தேகநபர் ஸ்பேடினா அவென்யூ மற்றும் வில்காக்ஸ் ஸ்ட்ரீட் பகுதியில் உள்ள பல்கலைக்கழகத்தின் வில்சன் ஹால் குடியிருப்பில் உள்ள அனைத்து பெண்களும் கழிவறைக்குள் நுழைந்துள்ளார் எனப்பொலிஸார் குற்றம் சாட்டுகின்றனர்.

19 வயதான சந்தேக நபர் டொரன்ரோ பல்கலைக்கழக வளாகத்தில் பெண் மாணவர்கள் குளிப்பதை படம் எடுத்ததாகக் கூறி கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் சர்வதேச மாணவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஷவர் திரைக்கு மேல் ஒரு கைத்தொலைபேசியை வைத்து இவர் படம் எடுத்தார் எனக் கூறப்படுகின்றது.

# முதியவரைத் தள்ளி விழுத்தியவரை தேடும் டொரன்டோ பொலிஸார்



ஒன்ராரியோ,மார்ச்17

இந்த வாரத் தொடக்கத்தில் நோர்த்யோர்க் சுரங்கப்பாதை நிலையத்தில் தரையில் தள்ளப்பட்ட முதியவர் ஒருவர் பலத்த காயம் அடைந்ததை அடுத்து, டொரன்டோ பொலிஸார் சந்தேக நபரைத் தேடி வருகின்றனர்.

புதன்கிழமை மாலை ஷெப்பர்ட் அவென்யூ ஈஸ்ட் மற்றும் டொன் மில்ஸ் ரோடு பகுதியில் உள்ள டொன் மில்ஸ் நிலையத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அதிகாரிகள் வந்தபோது, ரயிலில் இருந்து வெளியேறிய சிறிது நேரத்தில், அடையாளம் தெரியாத நபர் ஒருவர் 71 வயதுடைய ஒருவரை தனது இரண்டு கைகளால் தள்ளியுள்ளார்.

பாதிக்கப்பட்டவர் கீழே விழுந்து அவரது தலை தரையில் மோதியதால் பலத்த காயங்கள் ஏற்பட்டன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

தாக்குதலுக்கு என்ன காரணம் என்று தெரியவில்லை எனவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

சனிக்கிழமையன்று, சந்தேக நபரின் படங்களை பொலிஸார் வெளியிட்டுள்ளனர்.



# பாலஸ்தீன ஆதரவுப் போராட்டத்தில் இருவர் கனடா பொலிஸாரால் கைது!

ஒன்ராரியோ,மார்ச்17

பாலஸ்தீன ஆதரவுப் போராட்டத்தில் இரண்டு பேரைத் தாங்கள் கைது செய்துள்ளனர் என்று டொரன்டோ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பிரதமர் பங்குபெறும் நிகழ்வின் தொடக்கத்தைத் தாமதப்படுத்தியமை மற்றும் தவறாக நடந்து கொண்டமை தொடர்பில் இவர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கிங் எட்வர்ட் ஹோட்டலுக்கு வெளியே நடந்த பேரணியில் வெள்ளிக்கிழமை இரண்டு பேர் கைது செய்யப்பட்டனர் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

லிபரல் கட்சி நிதி சேகரிப்பில் கௌரவ விருந்தினராக ஜஸ்டின் ட்ரூடோ கலந்து கொண்ட போது, இந்த நிகழ்வுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

ஆர்ப்பாட்ட ஏற்பாட்டாளர்கள் நிகழ்வுக்கு முன்னதாக ஓர் அறிக்கையை வெளியிட்டிருந்தனர்.

இஸ்ரேல்-ஹமாஸ் போருக்கு மத்தியில் 'வழக்கம் போல் வணிகத்தை' தொடர முடியாது என்ற செய்தியை கனடாவின் லிபரல் கட்சிக்கு அனுப்புவதாக இந்த அறிக்கை அமைந்திருந்தது.

# தமிழ்ச் சமூக மையத்தின் பொது மக்கள் சந்திப்பு கட்ட நிர்மாணச் செயற்பாடுகள் குறித்து விளக்கம்

ஒன்ராரியோ,மார்ச்17

தமிழ்ச் சமூக மையத்தின் பொது மக்கள் சந்திப்பு நேற்று சனிக் கிழமையன்று ஸ்கார்பரோ சிவில் சென்ரரில் நடைபெற்றது.

இதன் போது தமிழ்ச் சமூக மையத்தின் கட்ட நிர்மாணச் செயற்பாடுகள் குறித்த அடிப்படை விளக்கம் மக்களுக்கு அளிக்கப்பட்டது. மக்கள் தம்மிடம் உள்ள சந்தேகங்களை கேட்டு நிவர்த்தி செய்வதற்கான சந்தர்ப்பமும் வழங்கப்பட்டது.

இளைஞர்கள் மற்றும் பெரியவர்கள் என அனைத்துத் தரப்பினரும், இந்த நிகழ்வில் பங்குபற்றி தமிழ்ச் சமூக மையம் பற்றிய சந்தேகங்களை கேட்டுத் தெரிந்து கொண்டமையுடன், இந்த முயற்சிக்கான பாராட்டுதல்களையும் தெரிவித்தனர்.

தமிழ்ச் சமூக மையத்தின் பணிப் பாளர்கள் சபையினால் இந்த கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

தமிழ்ச் சமூக மையத்தின் நிர்மாணத்திற்காக ஏற்கனவே மத்திய அரசு 16 மில்லியன் டொலர்களையும், மாநில அரசு 13.2 மில்லியன் டொலர்களையும் வழங்க உறுதியளித்துள்ளன.

அத்துடன், டொரன்டோ நகர சபையானது மிகவும் குறைந்த குத்தகைக்கு கட்டடத்தை நிர்மாணிப்பதற்கான காணியை வழங்கியிருக்கின்றது.

நிர்மாணத்திற்கான ஆரம்ப கட்டப் பணிகள் 2019ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட போதிலும், கொவிட்-19 பெருந்தொற்றின் காரணமாக பாதிக்கப்பட்டிருந்த நடவடிக்கைகளை புதிதாக தெரிவு செய்யப்பட்டுள்ள தமிழ்ச் சமூக மைய நிர்வாகக் குழுவானது மீள ஆரம்பித்துள்ளதுடன், 2025ஆம் ஆண்டில் முதல் கட்ட நிர்மாணத்தை ஆரம்பிப்பதற்கும் திட்டமிட்டுள்ளது.